**O.S.No. 115/2015**

**Date:16.12.2024**

பி,**வா.சா 1 மனோன்மணி**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் இவ்வழக்கை தனிப்பட்ட முறையில் நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். மற்ற பிரதிவாதிகளுடன் சேர்ந்து நடத்தவில்லை. மற்ற பிரதிவாதிகளுக்கு நான் சாட்சியம் அளிக்கவில்லை. எனக்கு மட்டும் நான் சாட்சியம் அளிக்கிறேன். 2ம் பிரதிவாதிக்கு நான் கிரையம்கொடுத்தாக கூறி தான் இவ்வழக்கை நடத்தி வருகீறேன் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்ததினால் தாவா சொத்தில் இந்த தேதியில் எனக்கு உரிமை எதுவும்கிடையாது என்றால் சரிதான். 2ம்பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்ததினால் 2ம் பிரதிவாதிக்கு தான் பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றாலும் எனக்கு எவ்வித பரிகாரமும் கிடைக்ககூடியது அல்ல என்றால் நான் 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டதால் பரிகாரம் கிடைக்ககூடியது அல்ல. 2ம் பிரதிவாதிக்கு பரிகாரம் கிடைக்கதக்கது. 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த கிரைய ஆவணத்தை சான்றிட்ட நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1994ல் தை மாதம் பொன்னுச்சாமிக்கும் எனக்கும் திருமணம் நடைபெற்றது. தேதி நியாபகம் இல்லை. மேற்படி திருமணம் நடைபெற்றது தொடர்பான சங்கதியை எதிர்வழக்குரையில் கூறவில்லை என்றால் சரிதான். நானும் மேற்படி பொன்னுச்சாமியும் திருமணம் ஆகி சுமார் 15 ஆண்டுகளுக்கு மேல் குடும்பம் நடத்தி வந்தோம் என்றால் சரிதான். மேற்படி பொன்னுச்சாமியும் நானும் வேறு வேறு சமுதாயத்தை சார்ந்தவர் என்றால் அவர் ஆசாரி சமூகத்தை சார்ந்தவர், நான் தேவர் சமூகத்தை சார்ந்தவர். எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டு பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை மேற்படி பொன்னுச்சாமிக்கு அனுப்பினேன் என்றால் சரிதான். வாதியை தான் மேற்படி பொன்னுச்சாமி திருமணம் முடித்துஇருந்தார் என்றால் சரிதான்.

நானும் மேற்படி பொன்னுச்சாமியும் எந்த ஆண்டில் இருந்து காதலித்து வந்தோம் என்றால் பால்ய பிரயாத்திலேயே இருவரும் காதலித்து வந்தோம். வாதியை திருமணம் செய்யும்போது மேற்படி திருமணம் நடக்ககூடாது என்று தடுத்தீர்களா என்றால் திருமணம் முடிந்ததே எனக்கு தெரியாது. ஆனாலும் நாங்கள் காதல் செய்துகொண்டிருந்தோம். மேற்படி 1ம் வாதியை எந்த தேதியில் பொன்னுச்சாமி சாதிய வழக்கப்படி விவாகரத்து செய்தார் என்பது குறித்து எனக்கு தெரியாது. மேற்படி பொன்னுச்சாமியும் வாதியும் எந்த நீதிமன்றத்திலும் தற்போது வரை விவாகரத்து பெறவில்லை என்றால் சரிதான். இறந்துபோன பொன்னுச்சாமி என்பவர் 1995 ஆம் ஆண்டே 2ம் பிரதிவாதி மனோன்மணி என் மனைவி என்று பிரஸ்தாபித்து வருகிறார், அவர் எனது மனைவி கிடையாது என செய்தி தாளில் விளம்பரம்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2ன் ஆவணத்தின் படி அறிவிப்பு அனுப்பியுள்ளீர்கள் என்றால் சரிதான். 1995லேயே எங்களுக்குள் தாவா ஏற்பட்டு நோட்டீஸ் அனுப்பி கொண்டோம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 நோட்டீஸ் அனுப்பிய பிறகு நாங்கள் இருவரும்சேர்ந்து வாழ்ந்தீர்களா என்றால் சிவகிரியில் சேர்ந்து வாழ்ந்தோம். எத்தனை வருடம் சேர்ந்து வாழ்ந்தோம் என்றால் எனக்கு நியாபகம் இல்லை. 2006ல் பொன்னுச்சாமி 2ம் வாதிக்கு செட்டில்மெண்ட் எழுதிய விவரம் குறித்து எனக்கு தெரியாது. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தை வைத்து தான் சிவகிரி நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருந்தார்கள் என்றால் சரிதான். சிவகிரி நீதிமன்றத்தில் கொடுத்த தீர்ப்பை நான் படித்து பார்க்கவில்லை. தீர்ப்பு குறித்த விவரமும் எனக்கு தெரியாது. வேறு எந்த நீதிமன்றத்திலும் இந்த வழக்கு தாக்கல்செய்யும் காலம் வரை சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் வசம் சொத்து இருந்த காரணத்தினால் வழக்கு தாக்கல் செய்யவில்லை. 1ம் வாதி பொன்னுச்சாமி மனைவி என்றாலும் சரிதான். ஆனால் விவாகரத்து ஆனவர்.

சிவகிரி வழக்கு நடைபெற்று முடிந்த பின்னர் 2ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை கிரையம் கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த சொத்தை பொன்னுச்சாமி எனக்கு வாய்மொழியாக நன்கொடையாக கொடுத்தாக கூறி தான் கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கிரையம் கொடுத்த பின்பும் தாவா சொத்தில் நான் தான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதிக்கு கொடுத்த கிரையம் சொத்தின் உரிமையை மோசடி செய்யும் நோக்கில் கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி கிரையம் கொடுத்த ஆவணமும் தற்போது வரை ஊர்ஜிகத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல. மேற்படி நான் நன்கொடையாக பெற்ற சொத்து பொன்னுச்சாமிக்கு பூர்வீக சொத்து என்றால் சரிதான். நான் 18.09.2006ல் 1ம் வாதிக்கு பொன்னுச்சாமி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை செல்லாது என பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி பரிகாரம் கேட்கவில்லை என்றாலும் கேட்டிருந்தால் எனக்கு கொடுத்த வாய்மொழி நன்கொடை பாதிக்கப்பட்டுவிடும் என்ற காரணத்தினால் மேற்படி பரிகாரம் குறித்து கேட்கவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ-7 ஆவணத்தில் தீர்வை ரசீதுகளில் வாதியின் பெயர் இடம் பெற்றுள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ-9, 10, 11, 12 ஆவணங்கள் அனைத்தும் வழக்கின் உரிமையை மோசம் செய்யும் நோக்கில் பொய்யாக உங்களால் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கையே 2ம் பிரதிவாதி குருசாமி தான் நான் நடத்தி கொண்டு வருகிறார் என்றால் சரிதான். இவ்வழக்கில் இருவரும் கூட்டாக சேர்ந்து எதிர்வழக்குரை தாக்கல் செய்து, தற்போது தனியாக தனியாக சாட்சியம் அளித்து வருகிறோம் என்றால் சரிதான். தாவா சொத்து என்னுடையது தான். 2ம் பிரதிவாதியை விசாரணை செய்ய வேண்டியதில்லை என்றால் சரிதான். வாய்மொழி நன்கொடை பொன்னுச்சாமி எந்த தேதியில் நடைபெற்றது என்றால் நியாபகம் இல்லை.

யார் முன்னிலையில் நடைபெற்றது என்றால் பஞ்சாயத்து பேசியவர்களில் ராசு த.பெ தெரியாது. அய்யப்பன் த.பெ.தெரியாது. அவர்களின் வயது குறித்தும் தெரியாது. நீங்கள் எந்த காலத்திலும் பொன்னுச்சாமிக்கு மனைவி கிடையாது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்துள்ளீர்கள் என்றாலும் தாவா சொத்தை காலி செய்ய வேண்டும் என வாதி கூறுகிறார் என்றால் சரியல்ல. ஏற்கனவே சிவகிரி நீதிமன்றத்தில் நீங்கள் மனைவி கிடையாது என்று தீர்ப்பாகியுள்ளது என்றாலும், தபசில் சொத்தில் எவ்வித உரிமையும் கிடையாது என்றாலும், அத்துமீறி தபசில்சொத்தில் உள்ளீர்கள் என்றாலும் வாதி கோரியபடி பரிகாரம் கிடைக்கதக்கது என்றாலும் சரியல்ல.

**ம.வி இல்லை.**